ஆகாசவாணி; செய்திகள் ; வாசிப்பவர் ; சங்கரநாராயணன்
உதவி ; சுந்தரராமன்
தமிழ் செய்தி அறிக்கை; தேதி ; 7.8.10
மாலை மணி நேரம் ; 7.15 – 7.25

முதலில் தலைப்பு செய்திகள் ;

1. பனிக்கட்டி மழையினால் பாதிக்கப்பட்ட லே மற்றும் இதர பகுதிகளில் பெருமெடுப்பிலான நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது; உதவி மற்றும் நிவாரண் பொருட்களை ஏற்றிக்கொண்டு விமானப்படையின் 6 விமானங்கள் லேக்கு போய்ச்சேர்ந்துள்ளன.
2. வன்முறையால் பாதிக்கப்பட்ட காஷ்மீரில் இப்போது நிலைமை பெருமளவில் அமதியாகவுள்ளது.
3. நக்ஸல்வாதத்தால் பாதிக்கப்ப்ட்ட மாவட்டங்களில் நிலைமையை சமாளிப்பதற்கான ஒருங்கினந்த செயல்திட்டத்தில் பின் தங்கிய பாவட்டங்களும் சேர்க்கப்படும்.
4. 100 கோடி டாலர் கடனுதவி உடன்படிக்கையில் இந்தியாவும் பாங்களாதேஷூ ம் கையெழுத்திட்டுள்ளன.
5. இந்திய இலங்கை அணிகளுக்கு இடையிலான இறுதி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

இனி விரிவான செய்திகள்..

REV/ LEH CLOUD BURST :

ஜம்மு காஷ்மீரில், லே மற்றும் பிற பகுதிகளில், பனிக்கட்டி மழை பெய்ததால் ஏற்பட்ட பேரழிவினால், 130 பேர் உயிரிழந்து விட்டனர். அங்கு , மாபெரும் நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 600 ற்கும் அதிகமானோரைக் காணாவில்லை; இடிந்து விழுந்த கட்டிடங்களில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகளில், மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.
நிவாரணப் பொருட்களுடன், இந்திய விமானப் படையின் 6 ஹெலிகாப்டர்கள் , இன்று, லேவிற்கு சென்றடைந்தது. அதில், 125 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்று , மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சென்றுள்ளது.
மருந்துகள், மின்சார ஜெனரேட்டர்கள், கூடாரங்கள், சிறிய x கதிர் சாதனங்கள், அவசர நிலை மீட்பு சாதனங்கள் ஆகியன அடங்கிய நிவாரண பொருட்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.
சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய 2 குழுக்களும், லேவிற்கு சென்றடைந்துள்ளன. பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினருக்கு வினியோகிக்கப்படுவதற்காக, உடனடியாக உட்கொள்ளும் விதத்தில் 4 ஆயிரம் உணவு பொட்டலங்களும் அனுப்பப்பட்டுள்ளன. Hanoyogmaவில், நேற்று ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் சுமார் 100 கிராமங்களில் அடித்துச் செல்லப்பட்ட வீடுகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும், அருகிலுள்ள இராணுவ முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டப் பகுதிகளை கண்டறிய, பொது மக்களின் நிர்வாக அமைப்பிற்கு, 3 ஹெலிகாப்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.
மண்சரிவுகளில் இருந்தும், வெள்ள நீரிலிருந்தும் 110 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக, அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. காயமுற்ற 500 பேரும், சுற்றுலாப் பயணிகளும், லே வில் உள்ள இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். லேவிலிருந்து, வர்த்தக ரீதியிலிலான விமானச் சேவைகள் இல்லையென்றால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் சடலங்களை, இந்திய விமானப் படையின் விமானங்கள் எடுத்துச் செல்லும்.
மொபைல் மற்றும் தகவல் தொடர்பை நிலைநாட்ட,BSNL இன், 19 VSAT மற்றும் பிற சாதனங்களைக் கொண்ட சிறப்பு விமானம் ஒன்று, விரைவில், லே மற்றும் மற்ற அண்டைப் பகுதிகளுக்கு செல்லும்.
திரு. Farooq Abdullah, திரு. Ghulam Nabi Azad, திரு.
Prithviraj Chavan ஆகியோர் அடங்கிய 3 உறுப்பினர் கொண்ட மத்தியக் குழு, நிலைமையை மதிப்பிட, லே சென்றடைந்துள்ளது.
Turtuk பகுதியில் , இராணுவத்தின் 31 ஜவான்களைக் காணவில்லை என்று, இராணுவ செய்தி தொடர்பாளர்
Colonel J S Brar தெரிவித்துள்ளார். ஒரு ஜவானின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் சொன்னார். சிக்கித் தவிக்கும் சுற்றுலாப் பயணிகளை மீட்க, புதுதில்லியிலிருந்து, லேவிற்கு 4 முதல் 5 கூடுதல் விமானச் சேவைகளை இயக்குமாறு, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம், உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து தகவல்களை அறிய லே நிர்வாகம் 24 மணி நேர தொலைபேசி வசதியை அமைத்துள்ளது. இதற்கான தொலைப்பேசி எண்கள் ;
09906990787 ; 09906990835.

US LTTE
தமிழ் ஈழ விடுதலை புலிகள் அமைப்பு LTTE சர்வதேச அளவில் இன்னமும் செயல்பாட்டில் இருப்பதாக அமெரிக்கா கூறுகிறது. இலங்கையில், இராணுவம் LTTEஐ தனது அளவில் வெற்றி கொண்டாலும், சர்வதேச தொடர்புகள் மூலம் இன்னமும் அதற்கு உதவிகள் நீட்டிக்கப்பட்டு வருவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது. இருந்தபோதிலும், LTTEக்கு நிதி மற்றும் ஆயுத சப்ளைகளை செய்து வந்தவர்களில் முதன்மையானவரான, KP என்ற குமரன் பத்மநாபன் கைது செய்யப்பட்டதன் மூலம், அதன்மீது கடும் தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ் சமுதாயத்திடமிருந்து, LTTE உறுப்பினர்கள் இன்னமும் நிதி திரட்டி வருவதாக உலகளாவிய பயங்கரவாதம் பற்றிய தனது சமீபத்திய அறிக்கையில் அது சுட்டிக்காட்டியுள்ளது.

BANGLADESH MUKHERJEE
100 கோடி டாலர் கடனுதவி உடன்படிக்கை ஒன்றில் இந்தியாவும் Bangladeshம் கையெழுத்திடவுள்ளன. இதற்காக, மத்திய நிதியமைச்சர் திரு Pranab Mukherjee இன்று மாலை Dhakaவிற்க்கு போய்ச் சேர்ந்துள்ளார். அவர் Dhakaவில் தங்கியிருக்கையில், Bangladesh பிரதமர் திருமதி Sheikh Hasinaவையும், நிதியமைச்சர் திரு A M A Muhith மற்றும் வெளியுறவு அமைச்சர் Dr. Dipu Moniஐயும் சந்தித்து பேசுவார். இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் தலைமை நிர்வாகிக்கும், Bangladeshன் பொருளாதார உறவுகள் பிரிவின் செயலருக்கும் இடையே இந்த உடன்படிக்கை கையெழுத்தாகும்.

INDIA PAK
இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தானிலிருந்து கட்டவிழத்துவிடப்பட்டிருக்கும் பயங்கரவாத சூழல் போக்கப்பட்டால்தான், இஸ்லாமாபாத் உடனான பேச்சுக்கள் தீவிரமாகவும் நீடித்தும் நடைபெறமுடியும் என்று புது தில்லி கூறியுள்ளது. அது இல்லாமற்போனால் பாகிஸ்தானின் மீதான நம்பிக்கை இழப்பும், அதற்கெதிரான மக்களின் கருத்தும் மேலும் தீவிரமடையவே செய்யும் என்று பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்து பேசிய வெளியுறவு செயலர் திருமதி நிருபமா ராவ் கூறியுள்ளார். மும்பை பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பாக 7 பேரை கைது செய்தது, தொடர்குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் என 20 பேரை அறிவித்தது உட்பட சில நடவடிக்கைகளை பாகிஸ்தான் எடுத்துள்ளபோதிலும், அது செய்யவேண்டியது இன்னமும் நிறைய உள்ளது என்று அவர் கூறினார். சதிதிட்டத்தை உறுதியாக, முனைப்புடன் விசாரணை செய்து, குற்றமிழைத்தவர்களை நீதிக்குமுன் நிறுத்துவது போன்றவைகளை பாகிஸ்தான் இன்னமும் நிறைவுசெய்யவேண்டியுள்ளதாக அவர் கூறினார்.

NAXAL PLAN
நக்ஸல்வாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நிலைமைய சமாளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த செயல் திட்டத்தில், நக்ஸ்ல்வாத தொல்லையில்லாத பின்தங்கிய மாவட்டங்களையும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த திட்டத்தில், நக்ஸல்வாதத்தால் பாதிக்கப்பட்ட 35 மாவட்டங்கள் தவிர ஏழ்மையான, பிந்தங்கிய மாவட்டங்களும் சேர்த்துக்கொள்ளப்பாடும் என்று திட்ட கமிஷனின் துணை தலைவர் திரு Montek Singh ahluwalia கூறியுள்ளார்.

SHIP COLLISION :
மும்பை கரைக்கு அப்பால், இரண்டு கப்பல்கள் மோதிக் கொண்டதால், பெருமளவில் எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளது. இன்று காலை 9.30 மணிக்கு, மும்பையின் கொலாபா துறைமுகத்திற்கு 5 கடல்மைல்களுக்கு அப்பால், MSC Chitra, Khalijia ஆகிய இரண்டு கப்பல்கள் மோதிக் கொண்டன.இதனையடுத்து, பெருமளவில், எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளது. இக்கப்பல்களில் இருந்து அவசர உதவி கேட்டு வேண்டுகோள் வந்ததை தொடர்ந்து, கப்பல்களின் 33 மாலுமிகள் மீட்கப்பட்டதாக, கரையோரக் காவல்படையின் அதிகாரிகள் தெரிவித்தனர். பிராந்திய நடவடிக்கை மையம், தனது கப்பலான Kamala Deviவை, சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு அனுப்பி, மாலுமிகளை மீட்டது. எண்ணெய்க் கசிவை மதிப்பிட, ஒரு ஹெலிகாப்டரும், ஒரு கப்பலும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

PAK – MUMBAI :

மும்பை பயங்கரவாதத்தாக்குதல்களில் சம்பந்தப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப்படும் Lashkar e Toibaவின் தலைவர்
Zakiur Rehman Lakhvi மற்றும் வேறு 6 பேரின் குரல் பதிவு மாதிரிகளை, பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றத்தில், அரசு தரப்பு வழக்குறைஞர்கள் கோரியுள்ளனர். இந்திய அதிகாரிகளின் வேண்டுகோளையடுத்து, இது குறித்த மனு ஒன்று, நீதிமன்றத்தில், இன்று தாக்கல் செய்யப்பட்டது. Lakhviயும், மற்றவர்களும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், பாகிஸ்தான் தண்டனைச் சட்டம், கணினி சம்பந்தச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில், குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். 2008ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில், மும்பையில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்கு திட்டமிட்டு , உதவி புரிந்ததாக, அவர்களின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

CHINA MINE FIRE :

சீனாவில், Shangdong மாகாணத்தின் கிழக்கே ஏற்பட்டத் தீ விபத்தில், தங்கச் சுரங்கத்தில் பணியாற்றிய 16 தொழிலாளிகள் உயிரிழந்தனர். நேற்று மாலையில், Zhaoyuan நகரத்தில், சுரங்கத்தில் திடீரென்று மின்கசிவு ஏற்பட்டதால், தீ பற்றியதாக, உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். அப்போது, 329 தொழிலாளர்கள், சுரங்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். தீப்பற்றியதால் ஏற்பட்ட புகையை உயிரிழந்தோரில் பெரும்பாலானோர் சுவாசித்ததால் Luoshan தங்கச் சுரங்கத்தின் மருத்துவ பணியாளர்கள் கூறினர்.
வேறு சிலர், மருத்துவமனையில் உயிரிழந்தனர். பலமணி நேர போராட்டத்திற்குப் பிறகு , தீ அணைக்கப்பட்டு, மின்சார சப்ளை மீண்டும் தொடங்கப்பட்டது.
துவக்கத்தில், 300 க்கும் அதிகமானோர் சிக்கிய தீயிலிருந்து, எஞ்சியிருந்த 7 சுரங்கத் தொழிலாளிகளை, மீட்புக் குழுவினர், இன்று காப்பாற்றினார்கள்.

CRICKET FINAL

இந்திய இலங்கை அணிகளுக்கு இடையே கொழும்பில் நடைபெறும் மூன்று கிரிக்கெட் டெஸ்ட் போட்டி தொடரின், இறுதி பந்தயத்தில் இந்திய அணி இன்று இலங்கை அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இந்திய அணியின் தரப்பில் VVS Laxman 103 ரன்களை குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தது, தொடரை இந்தியா சமன் செய்வதற்கு உதவியாக இருந்தது. கொழும்பில் உள்ள P Sara Oval மைதானத்தில், 16 ஆண்டுகளுக்குப்பின் இலங்கை அணி இப்போது முதன்முறையாக தோற்றுப்போயுள்ளது.